**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண். EA 1 of 2019 in EP 52 of 2015 in OS. 168 of 2001**

2021ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW3 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G. சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ஜெயராம் | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை (சம்மனின் பெயரில்)**

*21.09.2021*

அருப்புக்கோட்டை தாலுகா கோவிலாங்குளம் கிராம பஞ்சாயத்தில் செயலாளராக உள்ளேன். சம்மன் எனக்கு வந்தது. சம்மனில் கண்ட ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். மலைச்சாமி பெயரிலான அசலுடன் ஒப்புகை செய்யப்பட்ட வீட்டு வரி கேட்பு பதிவேடு நகலை தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.1 ஆகும். இந்த ஆவணம் 2020 - 2021 ஆண்டுக்குரியது. எனக்கு தெரிந்து ஆவணங்கள் படி மலைச்சாமி இந்த முகவரில் 15 ஆண்டுகளாக வசித்து வருகிறார். 15 ஆண்டுகளாக மலைச்சாமி பெயரில் தான்

வரிவிதிப்பு ஏற்பட்டுள்ளது. சம்மனுக்கு பின்பு மலைச்சாமி 1வது லக்க வீட்டுமுகவரில் தான் குடியிருந்து வருகிறார் என்று பார்த்து தெரிந்துகொண்டேன்.